**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கடலாடி**
**முன்னிலை:திரு.N.விஸ்வநாத், B.A.,B.L.,M.B.A.,L.L.M.**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கடலாடி.**

**2024 ம் ஆண்டு மார்ச் திங்கள் 25 ம் நாள் திங்கட்கிழமை**

**I.A.No.01/2024**
**in**
**O.S.No.94/2019**

வள்ளிமயில் வகையறா ...மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

இராமலிங்கம் வகையறா ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இந்த இடைநிலை மனு என் முன்பாக 11.03.2024 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.பெரியசாமி அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.வேலுச்சாமி அவர்கள் ஆஜராகியும், தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இன்று வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் பிராதை திருத்தம் செய்து வழக்கை மேல்நடத்த உத்தரவிடக்கோரி மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்.**

மனுதார் இவ்வழக்கில் 2-ம் வாதி என்றும், 1-ம் வாதிக்காகவும் சேர்த்து நானே இந்த அவிடவிட்டைதாக்கல் செய்கின்றேன் என்றும், வழக்கில் இப்பால் பிராதுக்கு பின்னால் கடந்த 16.10.2020-ம் தேதி 2-ம் பிரதிவாதி பொன்னையா காலமாகிவிட்டதால் ஷையாருக்கு வாரிசு சேர்க்கக்கோரி இ.ம.எண்.99/2020 என்ற மனுவை தாக்கல் செய்ததில் மனுவானது உபய தரப்பு விசாரணைக்கு பின்னர் கடந்த 24.01.2024 ம் தேதி அனுமதிக்கப்பட்டுள்ளது என்பதால் பிராதை திருத்த வேண்டியது

அவசியமாக இருக்கிறது என்பதாலும் மனுவை அனுமதித்து உத்தரவிடக்கோரி மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் மனுவினை செலவுத்தொகையுடன் அனுமதிக்கக்கோரி மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது.

4) இந்த இடைநிலை மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில் மனுதாரர் கோரியுள்ள பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதா? என்பதேயாகும்.

இம்மனுவில் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5) இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

இம்மனுதாரர் அசல் வழக்கில் வாதி. 2ம் பிரதிவாதி 16.10.2020ல் இறந்துவிட்ட காரணத்தினால் அவரது வாரிசுதாரர்களை தரப்பினர்களாக சேர்க்க இ.ம.எண்.99/2020ல் மனு கொடுக்கப்பட்டு அந்த மனு அனுமதிக்கப்பட்டுள்ளதன் அடிப்படையில் அசல் வழக்கினை திருத்தம் செய்திட உத்தரவிடக்கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எதிர்மனுதாரர் தரப்பில் இம்மனுவை செலவுத்தொகையுடன் அனுமதிக்கக்கோரி மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது.

அசல் வழக்கில் இறந்துபோன 2ம் பிரதிவாதியின் வாரிசுதாரர்களை தரப்பினர்களாக சேர்த்து திருத்தம் செய்திட வேண்டியது அவசியமானதாகவும், நியாயமானதாகவும் உள்ளது. எனவே மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில் இம்மனு அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு 25.03.2024 இன்று அவையறிய பகரப்பட்டது.

N VISWANATH

Digitally signed by N VISWANATH
Date: 2024.03.25 17:06:00 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி.

**<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>:** இல்லை

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>:** இல்லை

N VISWANATH
Digitally signed by N VISWANATH
Date: 2024.03.25 17:06:04 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி.

I.A.No.01/2024
in
O.S.No.94/2021

Date:25.03.2024
IA order